மாகாணத் திறைசேரி - வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:-NP/09/FRM/ 2009 Date:- 19.05.2009

## மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/12/2009

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

### 2008ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளப் பெருக்கும் சூறாவளியும் காரணமாக பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம் வழங்குதல்.

12/2009ம் இலக்கமும் 14.05.2009ம் திகதியும் கொண்ட பொதுதிறைசேரி சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. 2008 நவம்பர் மாதம் 25,26,27 ஆகிய மூன்று தினங்களுள் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் மழை, சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட அப்பிரதேசத்தில் வசிக்கும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வட்டி இல்லாத விசேட முற்பணம் ஒன்று வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. இந்த விசேட முற்பணமானது குறிப்பிட்ட உத்தியோகத்தரின் படிகள் எதுவும் அற்ற ஒரு மாத அடிப்படைச் சம்பளமாக இருத்தல் வேண்டும். இது வழங்கிய மாதத்திற்கு அடுத்த மாதத்திலிருந்து பத்து (10) சம தவணைக் கட்டணங்களில் அறவிடப்படுதல் வேண்டும்.

4. இக் கடனானது தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV பந்தி 3ல் குறிப்பிட்ட அறவீடுகளில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

5. இக் கடனானது 31.07.2009ம் திகதிக்கு முன் வழங்கப்படுதல் வேண்டும்.

6. இக் கடன் சம்பந்தமான ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. தகுதி பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்களைப் பெற்ற பின் அதற்குரிய கட்டுநிதியை மாகாண திறைசேரியிடமிருந்து கோரிப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆ.செல்வத்துரை,
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி..
பிரதம செயலாளருக்காக.

பிரதிகள்:- (தகவலுக்காக)
1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வமா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வமா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வமா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு - வமா

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct 060-2264892 Mobile – 077-3868570 General No – 060 – 2266503
Fax - 026 – 2226953 E-Mail – nptreasury@sltnet.lk